மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வாழ்க்கைச் சரித்திரத்தை எல்லாம் என் சொல்ல வேண்டும் ? கேள்வியை நேரடியாகவே கேளுங்கள்.

திரு. நா. வீராசாமி : இப்போது 20 வயதில்தான் பட்டப்படிப்பை முடிக்க முடிகிறது. அதை மாற்றி, 18 வயதில் பட்டப்படிப்பை முடிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : நம்முடைய நாட்டிலே 5 வயதில் குழந்தைகளை பள்ளிகளில் சேர்க்கிறோம். மேலை நாடுகளில் 6 வயதில் தான் குழந்தைகளைப் பள்ளிகளில் சேர்க்கிறார்கள். அங்கும் 15 ஆண்டு பட்டப் படிப்புக்கு வகை செய்திருக்கிறார்கள். ஆகவே, இந்த வயதுதான் குழந்தைகள் கல்வி பெற தகுதியான பருவம் என்று வல்லுநர்கள் முடிவு செய்திருக்கிறார்கள்.

Services of Director of Legal Studies lent to Pondicherry

* 536 *Q*.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether the Director of Legal Studies was deputed to Pondicherry in connection with the starting of a Law College during May–June 1972; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) 1972-73-ல் பாண்டிச்சேரியில் சட்டக் கல்லூரி ஆரம்பிப்பதற்குரிய சாத்தியக்கூறு பற்றி ஆராய்வதற்குரிய ஆணையாளராக, சென்னை பல்கலைக் கழகத்தின் சார்பில் பணிபுரிவதற்கு, சென்னை சட்டக் கல்வி இயக்குநருக்கு 1972 ஜூன் மாதத்தில் அரசு அனுமதி அளித்தது.

திரு. என். டென்னிஸ் : தலைவரவர்களே, மதுரை சர்வகலாசாலையில் சட்டக் கல்லூரி இல்லாத குறை இருந்து கொண்டிருக்கிறது. சென்னை சட்டக் கல்லூரியில் இட நெருக்கடி இருக்கிறது. ஆகவே, தென் மாவட்டங்களிலுள்ள மாணவர்கள் சட்டக் கல்வி பெறும் வகையில் மதுரையில் ஒரு சட்டக் கல்லூரியை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, சென்னை சட்டக் கல்லூரியில் இட நெருக்கடி இருப்பதால் மதுரையில் ஒரு சட்டக் கல்லூரியை ஏற்படுத்த வேண்டுமென்ற கோரிக்கை பல்லாண்டு காலமாக இருந்து வருகிறது. சட்டக் கல்லூரி அமைக்க வேண்டுமென்றால் அதற்குப் போதுமான இடவசதியும், கட்டட வசதியும் இருக்க வேண்டும். மதுரையில் சட்டக் கல்லூரி ஏற்படுத்துவதற்கு இந்த வசதிகள் இல்லாததால் இந்தக் கோரிக்கை தள்ளிப் போடப்பட்டிருக்கிறது.